# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,247 — 1964 දෙසැම්බර් 4 වැනි සිකුරාදා — 1964.12.4

14,247 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 367 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 369 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 371 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 371 | நானாவித அறிவித்தல்கள் . .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்."

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்

3. **நியம விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாளவீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சதவீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுவோர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடற்றகுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்ட/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டால் ஒழிய 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல்நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இல. அரசாங்க மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனி செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இணைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சாகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

### முக்கிய விளம்பரம்

1964 ம் ஆண்டு மார்கழி (திசெம்பர்) மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு மார்கழி (திசெம்பர்) மாதம் 24 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும், 1964 ம் ஆண்டு மார்கழி (திசெம்பர்) மாதம் 19ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1964 ம் ஆண்டு மார்கழி (திசெம்பர்) மீ 4 ந் உ.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர் ; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுவதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானால் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப் பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானால், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—" புது உத்தியோகத்தர் " என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரி சுற்றுநிருபத்தின் உப பந்திகள் 2 (ii) (B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்க பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முழுப் சேவையாற்றியவர்களும், தொண்டர்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும், 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக்காலத்தைத் தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற விதிகள்.—(i) அரசாங்க சேவையிலுள்ள தகைமையுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத்தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக, முடிவுத் திகதியன்றோ அதன் முன்னரோ அதனைப் பெறக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவு செய்யப்பட்டால்) விடுவிக்கப்படுவார்களா அன்றா என்பதை கரும முறைக்கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்குக் குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிகான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## பிரதிநிதிகள் சபை

பிரதிநிதிகள் சபைப் பணியாளர் சேவையில் காலியாகவுள்ள இரு உணவு பரிமாறுவோர் பதவிகளுக்கும், துப்பரவு செய்பவர் பதவியொன்றுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—
ரூபா 600 — 8 × 30 ம் 1 × 24 — 864

வீட்டுவாடகை, வாழ்க்கைச் செலவுப்படி, விசேட வாழ்க்கைச் செலவுப் படி, என்பன அரசாங்க விதிப்படி கொடுக்கப்படும்.

3. விண்ணப்பதாரர்கள்—

(அ) இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 21 வயதுக்குட்படாதவர்களாயும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும் ;

(இ) சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் 7 ஆம் வகுப்வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

4. ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் நியமனத்துக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து, 109 ஆம் இலக்க நிருவாக ஒழுங்குவிதியின் பிரகாரம், அவ் விண்ணப்பதாரர்கள் பதவியேற்பதற்குத் தாங்கள் இணங்குகின்றார்களா இல்லையா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களில் தெரிவிக்க வேண்டும்.

5. விண்ணப்பங்களுடன் நற்சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் மாத்திரமே முதலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள், 1964, டிசெம்பர் 26 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக " பிரதிநிதிகள் சபைச் செயலதிகாரி, கொழும்பு 1. " என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைத்த விபரத்துக்கு பதில் அனுப்பப்படமாட்டாது.

எஸ். எஸ். விஜேசிங்க,
பிரதிநிதிகள் சபைச் செயலதிகாரி.

கொழும்பு,
1964 ம் ஆண்டு நவம்பர் மீ 27 ஆம் உ.

12-195—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

## பிரதிநிதிகள் சபை

பிரதிநிதிகள் சபைப் பணியாளர் சேவையில் காலியாகவுள்ள இரண்டாந்தர எழுதுவினைஞர் பதவிகள் இரண்டுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு:—
ரூபா. 1,680—120—4,320

வீட்டுவாடகை, வாழ்க்கைச்செலவுப்படி, விசேட வாழ்க்கைச்செலவுப்படி என்பன அரசாங்க விதிப்படி கொடுக்கப்படும்.

3. விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாவும் 35 வயதிற்குட்பட்டவர்களாவும் இருத்தல் வேண்டும். பொது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்தவர்களும் அதனையொத்த ஏனைய சேவையைச் சேர்ந்தவர்களும் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து, 109 ஆம் இலக்க நிருவாக ஒழுங்கு விதியின் பிரகாரம், அவ்விண்ணப்பதாரர்கள் பதவியேற்பதற்குத் தாங்கள் இணங்குகின்றார்களா இல்லையாவென்பதைத் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களில் தெரிவிக்க வேண்டும்.

4. ஏற்கனவே அரசாங்க சேவையிலில்லாத விண்ணப்பதாரர்கள், ஆகக் குறைந்தது உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திரத்தை உடையவர்களாக இருக்கவேண்டும்.

5. தற்பொழுது காலியாகவுள்ள பதவிகள் பற்றிய விபரம் வருமாறு:

(அ) சிங்களத்தை ஆங்கிலத்திலும், ஆங்கிலத்தைச் சிங்களத்திலும் மொழி பெயர்க்கும் தகுதியுடையவரும், சிங்களம், ஆங்கிலம் இரண்டிலும் " ரைப " அடிக்கக்கூடியவருமான ஓர் எழுதுவினைஞர்,

(ஆ) தமிழை ஆங்கிலத்திலும், ஆங்கிலத்தைத் தமிழிலும் மொழி பெயர்க்கும் தகுதியுடையவரும் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் " ரைப் " அடிக்கக் கூடியவருமான ஓர் எழுதுவினைஞர் ;

இப்பதவிகளுள் எதற்குத்தாம் விண்ணப்பிக்கின்றார்களென்பதை விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் தெரிவிக்க வேண்டும்.

6. விண்ணப்பங்களுடன், நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் மாத்திரமே முதலில் அனுப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்த விபரத்துக்குப் பதில் அனுப்பப்படமாட்டாது. விண்ணப்பங்கள், 1964, டிசெம்பர் 26 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக "பிரதிநிதிகள் சபைச் செயலதிகாரி, கொழும்பு 1." என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

எஸ். எஸ். விஜேசிங்க,
பிரதிநிதிகளசபைச் செயலதிகாரி.

கொழும்பு,
1964 ம் ஆண்டு நவம்பர் மீ 27 ந் உ.

12–196—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன திணைக்களம்

### ஹக்வட்டுன ஓயா திட்டம்

ஹக்வட்டுன ஓயா திட்டத்தில் இடது பக்க வாய்க்காலின் கிளைவாய்க்கால் 4 வது மைல் வெட்டுதற்காக கேள்விப்பத்திரங்கள் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் (வடமேல் மாகாணம், குருநாகல்) 1965 ம் ஆண்டு தை மாதம் 5 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின் உடன் திறக்கப்படும்.

நீர்ப்பாசன திணைக்களத்தில் 20,000/- ரூபாவுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும் இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் வடமேல் மாகாண பிரிவின் கீழ் உள்ள எல்லா நீர்ப்பாசன பொறியியலாளரின் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு தை மாதம் 1 ம் திகதி வரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியினராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்பதற்கு நீர்ப்பாசன பொறியியலாளர்களுக்கு பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் மேற்கூறிய நீர்ப்பாசன பொறியியலாளர்களின் அலுவலகத்தில் ரூபா 25/- கேள்விக்கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டை காட்டினாலும் போதுமானது.

இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் ஹக்வட்டுன ஓயா நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சிவலிங்கம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
ஹக்வட்டுன ஓயா திட்டம்,
மகுள்பொத்த.

23.11.1964.

12–119—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### புத்தளம் உப பிரிவு

புத்தளம் உப பிரிவிலுள்ள கரவித்தயோத எலத்திட்டத்தின் கீழுள்ள கரவித்தயோத எல வாய்க்காலில் முதல் மூன்று கட்டையிலும் வெள்ளத்தால் சேதப்படுத்தப்பட்ட இடங்களில் திருத்தங்கள் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் குருநாகலையிலுள்ள வடமேற்பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு டிசம்பர் மாசம் 29 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 21,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் கீழ்க்காணும் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு டிசம்பர் மாசம் 24 ந் திகதி வியாழக்கிழமை வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

1. புத்தளம்
2. நிக்கவெரட்டிய
3. குருநாகல்
4. ஹக்வத்துன்ஓயா
5. ருஜாங்கனை

கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்களுக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில ரூபா 25 கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும். இக் கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் புத்தளம் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். எம். சிவப்பிரகாசம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
புத்தளம் உபபிரிவு.

புத்தளம்,
1964 ம் ஆண்டு நவெம்பர் மீ 27 ந் உ.

12–166—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### குருநாகல் உபபிரிவு

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வடமேல் பகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மார்கழி மாதம் 29 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும். அதனபின உடனே திறக்கப்படும்.

| வேலை விபரம் | ஒப்பந்தக்காரர்களாய் பதிவுசெய்யப்பட்டுள்ள சொகை | கேள்வி கட்டணத் தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| திமே கர குளம் | 20,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகை | 25/- |
| தன்மொல்லகம அணைக்கட்டு | 20,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகை | 25/- |

இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் வடமேல் மாகாண பிரிவின்கீழ் உள்ள நீர்ப்பாசன கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 24.12.64 வரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியினராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு

விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் மேற்கூறிய நீர்ப்பாசன பொறியியலாளர்களின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத் தவிர்ந்த ஏனைய கச்சேரியொன்றில் அல்லது கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் ரூபா 25/- கட்டிப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இச்கேள்விப் பத்திரங்களைப்பற்றிய மற்றெல்லா விபரங்களையும் அலுவலக நேரங்களில் குருணாகல் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சண்முகராசா,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
குருணாகல் உப பிரிவு.

குருணாகல்,
1964 ம் ஆண்டு நவெம்பர் மீ 26 ந உ.

12–134—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

## வித்தியா பகுதி

### சங்கீதக் கருவிகளைப் பழுது பார்த்தல்

கீழே குறிக்கப்பட்டுள்ள சங்கீதக் கருவிகளைப் பழுது பார்த்தற்கான கேள்விப் பத்திரங்களை 1964 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ந திகதிவரை வித்தியாதிபதி ஏற்றுக் கொள்வார். விலாசம்: வித்தியாதிபதி, விநியோகக் கிளை, வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2.

| | | |
|---|---|---|
| 1. | கிஞ்சிரா .. | 1 |
| 2. | ஜில்ருபா .. | 3 |
| 3. | சித்தார் .. | 6 |
| 4. | ஜில்ருபா போஸ் .. | 3 |
| 5. | எஸ்ராஜ் .. | 11 |
| 6. | வயலின் .. | 14 |
| 7. | சுருதிப் பெட்டிகள் | 4 |
| 8. | விருது றபாணம் | 1 |
| 9. | டப்ளா சோடி .. | 15 |
| 10. | தம்புரு .. | 1 |
| 11. | எஸ்ராஜ் போஸ் .. | 15 |
| 12. | வயலின் பெட்டிகள் | 3 |
| 13. | வயலின் போஸ் | 5 |

இக்கருவிகளை, அலுவலக நேரத்தில் இரத்தினபுரி வித்தியா கந்தோரில் பார்வையிடலாம்.

எவ். எஸ். விஜயசூரியா,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1964 ம் ஆண்டு டிசெம்பர் மீ 4 ந உ.

12–168—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

## சுகாதாரத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

1964 ம் ஆண்டு ஒக்ரோபர் 30 ம் திகதி வெளியான 14,211 ம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட கீழ்க்காணும் 5 தாபனங்களின் கேள்விகள் மூடப்படும் திகதி 17.12.64, வியாழக்கிழமை மு. ப. 10 க்கு பிற்போடப்பட்டிருப்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எச். ஏ. யேசுதாசன்,
பதில் சுகாதார சேவை அத்தியட்சகர்.

குருணாகல்,
1964 ம் ஆண்டு நவம்பர் மீ 27 ந உ.

தாபனங்கள்—குருணாகல் பகுதி

1. துனுக்க தேனியா
2. கொபேகன
3. மூணமல்தேனியா
4. முறுத்தங்கே
5. சந்தலன்காவ

12–176—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1964 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ம் திகதி மு.ப. 10.00 மணிவரை, மகரகம 1 ம் தர டிப்போவில் டிப்போ முகாமையாளர் காரியாலயத்தை அமைப்பதற்கு, கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு, பொரலஸ்கமுவ, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பிரதிப் பிரதம பொறியியலாளருக்கு (சிவில்) விண்ணப்பிக்கவும்.

ரூ. 40,000/- க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட அரசாங்க, இ. போ. ச. கொந்தராத்துக்காரர்களே கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பர். அவர்களுடைய சான்றேறுகள் பிரதிப் பிரதம பொறியியலாளரின் (சிவில்) பரிசோதனைக்குக் காட்டப்படவேண்டும். சான்றேறுகள் அங்கீகரிக்கப்பட்டால், கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள சபையின் பிரதம கணக்காளர் உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/- ஐக் கட்டவேண்டும்.

எல்லாக் கேள்விப்பத்திரங்களும், பிரதிப் பிரதம பொறியியலாளரிடமிருந்து (சிவில்) பெற்றுக்கொள்ளக்கூடியதான பத்திரங்களில் செய்யப்படவேண்டும். கட்டுப்பணப் பற்றுச்சீட்டைக் காட்டுவதன்மேரில், 1964 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை இவர் கேள்விப்பத்திரச் சாதனங்களை வழங்குவார்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5,
1964 ம் ஆண்டு நவம்பர் மீ 25 ம் உ.

12–264—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## சௌக்கியப் பகுதி—மலேரியாத் தடுப்பு இயக்கம்

**உபயோகிக்க முடியாத ரயர், ரியூப், பற்றறி, மோட்டார் வாகன உறுப்புக்கள் மற்றும் பொருட்கள் விற்பனைக்குரிய கேள்விப் பத்திரங்கள்**

உபயோகிக்க முடியாத ரயர், ரியூப், பற்றறி, மோட்டார் வாகன உறுப்புகள், மற்றும் பொருட்கள் விற்பனைக்கு 25.11.64 ல் முடிவடைந்த கேள்விப் பத்திரங்களின் இறுதித் தீர்வு :

(அ) கிடைத்த கேள்விப் பத்திரங்களின் தொகை : 14.

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரதாரின் பெயரும் முகவரியும் :
ரயர் மாட் (சிலோன்) லிமிற்றெட்,
713, பேஸ்லைன் வீதி,
கொழும்பு 9.

(இ) ஏற்றுக்கொள்ளப்பபட்ட தொகை ரூபா : 20,304.

ந. சிவபாதசுந்தரம்,
அத்தியட்சகருக்காக,
மலேரியாத் தடுபபு இயக்கம்.

நாராஹேன்பிட்டி, கொழும்பு 5,
1964 ம் ஆப் நவம்பர் மீ 28 ந உ.

12–239—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

## ஏல விற்பனை

1964 ம் ஆண்டு மார்கழி 28 ந் திகதி காலை 10.30 மணிக்கு கண்டி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் நாய் இரண்டு ஏலவிற்பனை செய்யப்படும்.

1. இந்த நாயின் பெயர் "கிலியோ". இது சுத்தமான எல்சசன் இனத்தைச் சேர்ந்தது. இதற்கு 2 வயது 6 மாதம்.

2. இந்த நாயின் பெயர் "ரெக்ஸ்". இது சுத்தமான எல்சசன். 8 வயது. இரண்டு நாய்களும் பொலிஸ் வேலைகளுககு தகுதியற்றதாக கணிக்கப்பட்டுள்ளது.

நாய்களை பார்க்க விரும்புவோர் விற்பனைக்கு முதல் நாள் கண்டி பொலிஸ் நாய்கள் இல்லத்தில் பார்வையிடலாம். விற்பனை முடிந்தவுடன் பணத்தைச் செலுத்தி நாயைக் கொண்டு செல்லல் வேண்டும்.

ஜீ. ஏ. டி. இ. ஏ. செனெவிரத்ன,
மத்திய மாகாண பொலிஸ் அதிகாரி.

கண்டி.

12–81—4.12.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,247

---

## காட்டுத் திணைக்களம்

### ஏலவிற்பனை

யாழ்ப்பாண அரசினர் மரககாலையில் இருக்கும் 4 அடி 6 அங்குலத்திற்கு மேற்பட்ட 583.8 க்ன அடி கொண்ட 31 முதிரை மரங்கள் யாழ்ப்பாண மாவட்ட வனபரிபாலன அதிகாரியால் 17.12.64 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கேட்க விரும்புவோர் ஏலவிற்பனைக்கு முன்னதாகவே மரங்களை பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏலவிற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ்க்கையொப்பமிட்டவரிடமோ அல்லது யாழ்ப்பாண அரசினர் மரக்காலையிலோ பெற்றுக்கொள்ளலாம்.

மு. சண்முகம்பிள்ளை,
மாவட்ட வனபரிபாலன அதிகாரி,
யாழ்ப்பாணம்.

காட்டுத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1964 ம் ஆப் நொவம்பர் மீ 18 ந உ.

12–235—4.12.64 ந் திகதிய வர்த்தமணி இல. 14,247

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும் அரசாங்க விடுமுறை இடையிடின வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. "நகலை" கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ரூல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1–8–63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 27 | 50 | ... | 40 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 17 | 50 | ... | 23 | 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 25 | 00 | ... | 33 | 00 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை சதம் | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 60 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 15 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | ... | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை சுலோண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.